මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
MINISTRY OF FINANCE, ECONOMIC STABILIZATION AND NATIONAL POLICIES

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව | செயலகம், கொழும்பு 01. இலங்கை. | The Secretariat, Colombo 01. Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: BD/CBP/01/01/15/2024
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2024.08.12

**வரவுசெலவுத்திட்ட சுற்றுநிருப இல. : 02/2024**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் நியதிச்சட்ட சபைகள் என்பவற்றின் தலைவர்கள் அனைவருக்கும்

## வரவுசெலவுத்திட்ட அழைப்பு - 2025

## 2025-2027 நடுத்தர கால நிதிக் கட்டமைப்பிற்குள் வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான வழிகாட்டுதல்கள் - 2025

2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டமானது 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பொது நிதி முகாமைத்துவச் சட்டம் (PFM சட்டம்) மற்றும் 2025-2027 நடுத்தர கால நிதிக் கட்டமைப்பு (MTFF) ஆகியவற்றுக்கு ஏற்ப தயாரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2025 வரவுசெலவுத் திட்டமானது நிதி ஒழுக்கம் மற்றும் விவேகமான நிதி முகாமைத்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள அதே நேரத்தில் போதுமான பொது நிதிகள் திறமையை மேம்படுத்துவதற்கும் பணத்திற்கான மதிப்பை உறுதி செய்வதற்கும் மூலோபாய ரீதியாக பயன்படுத்தப்படுவதை உறுதி செய்யும். இந்தச் சுற்றறிக்கையின் நோக்கம், செலவின மதிப்பீடுகளைத் தயாரிப்பதில் செலவழிக்கும் முகவர் நிறுவனங்களுக்குத் தேவையான வழிகாட்டுதல்களை வழங்குவதாகும்.

2022 இல் உச்ச நிலையில் காணப்பட்ட முன்னொருபோதும் இல்லாத பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து, அரசாங்கம் கடந்த இரண்டு ஆண்டுகளில் ஒரு விரிவான, ஒருங்கிணைந்த பாரிய பொருளாதார சீர்திருத்த திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளது. இந்த முயற்சியினால் நிதி சீர்திருத்தங்கள் முன்னணியில் உள்ளன. இந்தச் சீர்திருத்தங்கள் மூலம், 2021 இல் காணப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.7% என்ற முதன்மை வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையை 2023 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.6% முதன்மை வரவு செலவுத்திட்ட மிகையாக மாற்ற முடிந்தது. அரசாங்க வருமானம் படிப்படியாக அதிகரித்து வருவதுடன், மத்திய வங்கியின் நிதியுதவி (பணம் அச்சிடுதல் என்று அழைக்கப்படுகிறது) 2023 செப்டம்பர் நடுப்பகுதியில் இருந்து நிறுத்தப்பட்டது. இந்த நடவடிக்கைகள் மூலம், பாரிய பொருளாதார சீர்திருத்த செயல்முறைகளுடன், பொருளாதாரத்தில் ஓரளவு ஸ்திரத்தன்மை தாபிக்கப்பட்டுள்ளது. இந்த நேர்மறையான முடிவுகள் ஒழுக்கமான நிதி நடைமுறைகளின் விளைவாக ஏற்பட்டதுடன், இது இலங்கை மக்களின் தியாகங்கள் மற்றும் முன்னெடுத்த சிரமங்களால் சாத்தியமானது.

கடந்த இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் நிதி நிலைமை கணிசமான ஸ்திரநிலையினை அடைந்துள்ள போதிலும், இது எந்த வகையிலும் மன திருப்தி அடைவதாக இருக்கமாட்டாது. நடைமுறையிலுள்ள பொருளாதார ஸ்திரத்தன்மையானது நிதி ஒழுக்கத்தை பராமரித்தல் மற்றும் பேரண்டப் பொருளாதார சீர்திருத்த பாதையின் தொடர்ச்சி ஆகியவற்றுடன் உள்ளார்ந்த முறையில் இணைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாதையிலிருந்து விலகுவதானது, விரைவான பொருளாதார வீழ்ச்சியை நோக்கி நாட்டை ஒரு தீய சுழற்சிக்குள் எளிதாகத் தள்ளுவிடும்.

திறைசேரியானது, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சவால்களிலினால் எதிர்காலத்தில் ஏற்படுவதற்கு சாத்தியமான நெருக்கடிகளைக் கருத்திற்கொண்டு பணரீதியான தாங்குதிறன்கள் மற்றும் நிதி நிலைத்தன்மையை உருவாக்குகிறது. எனவே, இலங்கையின் புதிய பொருளாதார மீட்சிக்கான இந்த அபாயங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அச்சுறுத்தல்கள் குறித்து விழிப்புடன் இருப்பது அவசியமாகும். இச்சூழலில், நிதி முகாமைத்துவம் மற்றும் பொதுச் செலவுகள் பணத்திற்கான மதிப்பை உறுதி செய்யும் அதே வேளையில் விவேகம் மற்றும் ஒழுக்கம் ஆகிய கொள்கைகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

## 02. 2025-2027 நடுத்தர கால அரசிறை இலக்குகள் மற்றும் உபாயங்கள்

i. வரி நிர்வாகத்தை வலுப்படுத்துதல், இணக்கப்பாட்டினை மேம்படுத்துதல் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் என்பவற்றின் மூலம் 2025 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15.1 சதவிகிதம் மற்றும் 2027 இல் 15.3 சதவிகிதம் வரை அரசாங்க வருமானம் மற்றும் மானியங்களை அதிகரித்தல்.
ii. விவேகமான செலவு முகாமைத்துவத்தின் மூலம் 2025 முதல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 20 சதவீத மட்டத்தில் அரசாங்க செலவினங்களை பராமரித்தல்.
iii. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிகக் கூடிய மூலதன செலவினத்தை அதிகரித்தல்.
iv. முதன்மை செலவினத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13 சதவீதமாக பேணுதல்.
v. முதன்மை மிகையை 2025 முதல் நடுத்தர காலத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.3 சதவீத மட்டத்தில் பேணுதல்.
vi. வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையை 2026 முதல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதத்திற்கு குறைந்த மட்டத்தில் பேணுதல்.
vii. நிதி பொறுப்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் நிதி முகாமைத்துவம் ஆகியவற்றின் கண்காணிப்பை வலுப்படுத்த தேவையான மறுசீரமைப்புகளை செயற்படுத்துதல்.
viii. அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் வருமானத்தை அதிகரித்தல் மற்றும் செலவினங்களைக் குறைத்தல்.

## 03. 2025 – 2027 நடுத்தர காலத்திற்குள் 2024 ஆம் ஆண்டிற்கான செலவின மதிப்பீடுகளைத் தயாரித்தல்

செலவின நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட செலவின மதிப்பீடுகளுக்கு இணங்க, மேலே குறிப்பிடப்பட்ட நிதி இலக்குகளின் கீழ் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க, மாற்றங்களைச் செய்த பிறகு, பொது திறைசேரி இறுதி செலவின மதிப்பீடுகளைத் தயாரித்தல் வேண்டும். எனவே, செலவு முகவர்களின் முதன்மையான கவனம், அதற்கேற்ற முறையில் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை தயாரிப்பது குறித்து செலுத்தப்படல் வேண்டும். இந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக, 2025 ஆம் ஆண்டிற்கான செலவின மதிப்பீடுகள் தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 04/2023 இன் பத்தி 03 இன் ஏற்பாடுகளை சரியான முறையில் பயன்படுத்துவதன்

மூலம் தயாரிக்கப்பட வேண்டும். மேலும், குறிப்பிட்ட சில நிறுவனங்களுக்குப் பொருந்தக் கூடியதும் ஏற்கனவே அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெற்றுள்ளதுமான பொதுச் செலவின மீளாய்வுக் குழுக்கள் (PERC) வழங்கிய பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும்.

**03.1 மூலதனச் செலவினம்**

**i. அபிவிருத்திச் செலவினம்**

மூலதனச் செலவினக் கருத்திட்டங்களில் குறிப்பிட்ட சதவீதம் எதிர்பார்க்கப்பட்ட கால வரையறைக்குள், மொத்த மதிப்பிடப்பட்ட செலவிற்குள் முடிக்கத் தவறிவிட்டதை சமீபத்திய ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. குறைந்த செலவு மற்றும் சிக்கல் குறைவான கருத்திட்டங்களின் குறிப்பிடத்தக்கவை கூட பலவீனமான முன்னேற்றம் மற்றும் செயல்படுத்தல் தாமதங்களைக் காட்டுகின்றன. இத்தகைய தாமதங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை என்பதுடன், இதன் விளைவாக செலவு அதிகரிப்பு ஏற்படுவதுடன், மிகவும் வரையறுக்கப்பட்ட பொது வளங்களின் உகந்த பயன்பாடு குறைவானதாகக் காணப்படுகிறது. எனவே, நடந்து கொண்டிருக்கும் திட்டங்களை திறம்பட முடிப்பதற்கும், முடிக்கப்பட்ட திட்டங்களின் திறன் / ஆற்றலினை முழுமையாகப் பயன்படுத்துவதற்கும் வலுவான கவனம் செலுத்தப்படல் வேண்டும். இந்த வருடத்தில் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றத்தை அடைவதற்கு பிரதான கணக்கீட்டு அதிகாரிகள் பொறுப்பாகும்.

இதற்கு மேலதிகமாக 2025 ஆம் ஆண்டிற்கான செலவின மதிப்பீடுகள் பின்வரும் அறிவுறுத்தல்களுக்கு இணங்க தயாரிக்கப்படல் வேண்டும்.

(அ) 2025 வரவுசெலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய அபிவிருத்திச் செலவுகள் தொடர்பாக கோரப்பட்ட தகவல்களை பின்னிணைப்புகள் 1, 2 மற்றும் 3 இல் உள்ள வடிவங்களில் வழங்குவது கட்டாயமாகும்.

(ஆ) கடன் மறுசீரமைப்பு செயன்முறை தொடர்பாக நிதி இருப்பு நிறுத்தப்பட்ட / இடைநிறுத்தப்பட்ட வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பான வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்துடன் கலந்தாலோசித்த பிறகு உரிய முறையில் ஒதுக்கீடு கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்தகைய கருத்திட்டங்கள் தொடர்பான ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்வதற்கு பின்னிணைப்பு 3 இல் கோரப்பட்ட தகவல்களை வழங்குவது க்ட்டாயமாகும்.

(இ) பொது முதலீடுகளால் உருவாக்கப்படும் மூலதனச் சொத்துக்கள் போதுமான அளவு பதிவு செய்யப்படவில்லை என்பது சமீபத்திய ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. நிலையான பொருள் குறியீடுகளை சரியான முறையில் பயன்படுத்தாதது அதற்கு ஒரு காரணம். எனவே, அபிவிருத்திக் கருத்திட்டங்களின் மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது, ஒவ்வொரு உப கருத்திட்டத்தின் கீழும் நிலையான பொருள் குறியீடுகளின் அடிப்படையில் ஏற்பாடுகள் பிரிக்கப்பட வேண்டும். உதாரணமாக, ஒரு உப கருத்திட்டம் கட்டிடக் கட்டுமானம், இயந்திரங்கள் வாங்குதல், மென்பொருள் மேம்பாடு போன்றவற்றைக் கொண்டிருந்தால், தொடர்புடைய உப கருத்திட்டத்தின் வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடுகள் அந்தந்த நிலையான பொருள் குறியீட்டின் கீழ் பிரிக்கப்படல் வேண்டும்.

(ஈ) அரசாங்கத்தின் கொள்கை வழிகாட்டுதலின் பேரில் புதிய கருத்திட்டங்கள் தொடங்கப்படுமாயின், 03/2023 ஆம் இலக்க தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறையின் கீழ் "தேசிய அபிவிருத்திக் குழு" பரிந்துரைகளுடன் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட புதிய கருத்திட்டங்களுக்கு மட்டுமே நிதிஏற்பாடுகள் சேர்க்கப்படல் வேண்டும்.

(உ) முன்னர் நிறுவப்பட்ட "தேசிய செயல்பாட்டு அறை (National Operation Room -NOR)" அல்லது "மீள்- செயல்நுணுக்க மற்றும் பாரிய கருத்திட்டக் குழுவின் முடுக்கம் ("Re-strategizing and Acceleration of Mega Projects Committee -RAMP)" ஆகியவற்றின் பரிந்துரைகள், நடந்துகொண்டிருக்கும் கருத்திட்டங்கள் மற்றும் அமைச்சரவையால் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து உன்னிப்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(ஊ) வரவு-செலவு திட்ட முன்மொழிவுகளாக தொடங்கப்பட்ட கருத்திட்டங்கள் குறித்த வருடத்திற்குள் விரைவாக முடிக்கப்படல் வேண்டும். குறிப்பாக குறிப்பிட்டாலன்றி, குறிப்பிட்ட வருடத்திற்கு அப்பால், எந்தவொரு வரவுசெலவுத் திட்டத்தையும் தொடர்வதற்கான நிதி ஏற்பாடுகள் எதுவும் சேர்க்கப்படக் கூடாது. மேலும், பொது நிதி முகாமைத்துவச் சட்டத்தின்படி, புதிய மூலதனச் செலவு தொடர்பான எந்தவொரு திட்டமும் “பொது முதலீட்டுக் குழு” வின் முறையான செயன்முறையைப் பின்பற்ற வேண்டும்.

(எ) மேலே (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வுகளைத் தவிர, கருத்திட்டக் காலம் முடிவடைந்த பிறகு உள்நாட்டு நிதியைப் பயன்படுத்தி வெளிநாட்டு அபிவிருத்திப் பங்காளிகளின் நிதி உதவியின் மூலம் கருத்திட்டங்களைத் தொடர்வதற்கான விதிகள் சேர்க்கப்படக்கூடாது. அத்தகைய கருத்திட்டங்களுக்கு ஏதேனும் செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு செலவுகள் இருந்தால், சம்பந்தப்பட்ட நிலையான நோக்கக் குறியீட்டின் கீழ், நிறுவனத்தின் செலவு மதிப்பீடுகளில் ஏற்பாடுகள் சேர்க்கப்படல் வேண்டும்.

(ஏ) தனியார் துறையிலிருந்து நேரடி முதலீடு அல்லது பொது-தனியார்-பங்காளித்துவத்திற்கான சாத்தியமுள்ள கருத்திட்டங்களுக்கு வணிக முன்மொழிவுகளை அழைப்பது ஊக்குவிக்கப்படுகிறது. அந்த வகையில், கருத்திட்டங்களில் இருந்து கிடைக்கும் வருமானத்தின் மூலமாகவும், அரசாங்கத்திற்கு தற்செயல் பொறுப்புகளை உருவாக்காமல், செலவினங்களை முடிந்தவரை ஈடுசெய்யும் வகையில் வணிக மாதிரிகள் உருவாக்கப்பட வேண்டும்.

(ஐ) அரசாங்கத்தினால் தொடர்புடைய தனியார் தரப்பினருக்கு வழங்கப்படும் வருடாந்த கொடுப்பனவுகள் மூலம் கருத்திட்டம் ஒன்றின் மொத்தச் செலவைத் தீர்த்து வைப்பதற்கு உட்பட்டது என்ற வகையில், அரச-தனியார்-கூட்டாண்மைத் கருத்திட்டங்களைத் தொடங்கக்கூடாது.

(ஒ) அபிவிருத்தித் திட்டங்களில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாடு, நவீன தொழில்நுட்பத்தின் பயன்பாடு மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(ஓ) அந்தந்த கருத்திட்டங்கள் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்டு, பொது முதலீட்டுக் கருத்திட்டத்தில் சேர்க்கப்படாவிட்டால், புதிய அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கான தொகுதி ஒதுக்கீடு வழங்கப்படமாட்டாது. மேலே உள்ள பிரிவு 03.1.i இல் உள்ள பந்தி (ஈ) இன் படி, இந்த முன்மொழிவுகளை "பொது முதலீட்டுக் குழுவிடம்" சமர்ப்பிக்க முடியாது.

(ஔ) "பொதுச் சேவையின் செயற்திறன் மற்றும் தரத்தை மேம்படுத்துதல்" என்ற 2024.08.05 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின்படி, தரவுப் பகிர்வு / முறைமை ஒருங்கிணைப்பு மூலம் சிறந்த சேவையை வழங்குவதற்கு வசதியாக தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களை தனித்துவமாக அடையாளம் காண வேண்டும் என்பதால் தற்போதுள்ள தகவல் முறைமையினை மேம்படுத்தவும் எதிர்கால தகவல் முறைமைகளைத் திட்டமிடவும் சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும்.

### ii. நிறுவன மூலதனச் செலவினம்

(அ) தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இல. 03/2021 மூலம் வாகனங்கள் வாங்குவதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் 2025 ஆம் ஆண்டிலும் நடைமுறையில் இருக்கும்.

(ஆ) வெளிநாட்டுப் பயிற்சிகளுக்காக திறன் அபிவிருத்தியின் கீழ் திரட்டு நிதியத்திலிருந்து செலுத்துவதற்கு எந்த நிதி ஏற்பாடும் செய்யப்படமாட்டாது. அத்தகைய பயிற்சி தேவைகள் மெய்நிகர் முறைகள் மற்றும் உள்ளூர் நிறுவனங்கள் மூலம் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

(இ) சேவை பிரமாணக் குறிப்புகள், ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மற்றும் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் கீழ் இத்தகைய பயிற்சிகள் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் மட்டுமே உள்ளூர் பயிற்சிகளுக்கான ஏற்பாடுகள் சேர்க்கப்பட வேண்டும், அல்லது அத்தகைய பயிற்சிகள் அதிகாரியின் கடமைகளுக்கு நேரடியாக தொடர்புடையதாக இருத்தல் வேண்டும்.

### iii. பராமரிப்பு, புனரமைப்பு மற்றும் மேம்பாடு

தற்போதுள்ள சொத்துக்களின் அதிகபட்ச திறனைப் பயன்படுத்தும் போது, ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்காக, பராமரிப்பு, புனரமைப்பு மற்றும் ஏற்கனவே உள்ள சொத்துக்களை மேம்படுத்துவதற்கு தேவையான ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்வதில் உரிய கவனம் செலுத்த வேண்டும். அதன்படி, மூலதன மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது, ஏற்கனவே உள்ள சொத்துக்களைப் பாதுகாத்து, அவற்றின் அதிகபட்ச உற்பத்திப் பயன்பாட்டைப் பெறுவதுடன், முறையான பொதுச் சேவைகளைப் பராமரிப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டும்.

குறிப்பாக, நெடுஞ்சாலைகள், புகையிரதம், மருத்துவமனைகள், பாடசாலைகள், முக்கிய அணைகளும் நீர்த்தேக்கங்களும், அணைக்கட்டுகள், கால்வாய்கள், நீர்ப்பாசனங்கள் ஆகியவற்றின் பராமரிப்புக்குத் தேவையான ஏற்பாடுகளை முறையான பராமரிப்பு திட்டத்தின் கீழ் குறிப்பிட்டு ஒதுக்கீடு செய்வது அவசியம்.

**iv. அதிகபட்ச செயற்திறனுடன் மாகாண சபை பொறிமுறையைப் பயன்படுத்துதல்**

மாகாண சபைகளுக்கு நேரடியாக ஒதுக்கப்படும் பணிகளுக்கு நிரல் அமைச்சுக்கள் அல்லது திணைக்களங்களின் கீழ் நிதி ஏற்பாடுகள் உள்ளடக்கப்படக்கூடாது. மாகாண சபையின் நிகழ்ச்சித்திட்டங்கள் / கருத்திட்டங்களுடன் பிராந்திய மட்டத்தில் நிரல் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் / கருத்திட்டங்களின் நகல்களைத் தவிர்ப்பதற்காக, மாகாண சபைகளுடன் ஒருங்கிணைந்து திட்டங்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

மேலும், மாகாண சபைகளின் கீழ் கணிசமான பணியாளர்களை ஈடுபடுத்தும் ஒரு நிறுவன அமைப்பு இருப்பதால், முடிந்தவரை மாகாண சபைகளின் உடன்பாட்டுடன் நிரல் அமைச்சுகள் / திணைக்களங்கள்/நிறுவனங்களின் சேவைகளை வழங்குவதற்கு மாகாண சபை கட்டமைப்பைப் பயன்படுத்த வேண்டும்.

**03.2 மீண்டெழும் செலவினம்**

மீண்டெழும் செலவினங்களுக்கான மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது பின்வரும் விடயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

**i. சம்பளங்கள், ஊதியங்கள், மேலதிக நேர மற்றும் பிற கொடுப்பனவுகள்**

(அ) பரீட்சைகள் மற்றும் / அல்லது நேர்முகத் தேர்வுகள் ஏற்கனவே நடத்தப்பட்ட 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கண்டிப்பாக ஆட்சேர்ப்பு நடைபெறும் என்று உறுதிசெய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் தவிர, புதிய ஆட்சேர்ப்புகளுக்கான ஏற்பாடுகள் சேர்க்கப்படக்கூடாது.

(ஆ) 2025 ஆம் ஆண்டிற்கான சம்பளம், ஊதியம் மற்றும் பிற கொடுப்பனவுகள் 2024.06.30 இல் உள்ள உண்மையான ஊழியர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஒவ்வொரு அதிகாரிக்கும் தனித்தனியாக கணக்கிடப்பட வேண்டும். அதேசமயம் விவரங்கள் நிறுவன மட்டத்தில் தயாரிக்கப்பட்டு பின்னிணைப்பு 4 இல் உள்ள வடிவமைப்பின் படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். நோக்கக் குறியீடு 1503 - தனிப்பட்ட ஊதியங்கள் இன் கீழ் வரவு செலவுத்திட்ட நிதி ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்ட அலுவலர்களின் விவரங்கள் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தனித்தனியாக இந்த படிவத்தில், சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(இ) அமைச்சரவை தீர்மானத்தின்படி, அத்தியாவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான ஏற்பாடுகள் அரசாங்க சேவையில் ஆட்சேர்ப்பு செயன்முறையை மீளாய்வு செய்வதற்காக பிரதமரின் செயலாளரின் தலைமையில் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் குழுவின் பரிந்துரைகளுக்கு இணங்க, அத்தகைய ஆட்சேர்ப்பு முன்னேற்றத்தின் அடிப்படையில் தேசிய வரவு செலவுத் திணைக்களத்தின் ஆலோசனையின் மூலம் பெறப்படல் வேண்டும்.

### ii. அபிவிருத்தி உதவிகள் மற்றும் நலன்புரி செலவினம்

ஏதேனும் சட்டத்தின் அடிப்படையில் அல்லது அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் செயற்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களைத் தவிர, நிறுவன மட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் மீது செயற்படுத்தப்படும் எந்தவொரு மானியம் அல்லது நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் எந்த நிதி ஏற்பாடும் சேர்க்கப்படக்கூடாது.

### 03.3 முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்

அரச அலுவலர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான மதிப்பீடுகள் பின்னிணைப்பு 5 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வணிக முற்பனக் கணக்குகளை பராமரிக்கும் நிறுவனங்கள், அது தொடர்பான மதிப்பீடுகளை, போதுமான தகவல்களைக் கொண்ட பொருத்தமான படிவத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

### 03.4 காலநிலை மாற்றங்களுக்கான பொறுப்பு

காலநிலை மாற்றத்தால் தூண்டப்படும் நிதி அபாயம், சமீபத்தில் உலகளாவிய கவனத்தைப் பெற்ற முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக அடையாளம் காணப்படலாம். இந்த பிரச்சினை வெளிநாட்டு அபிவிருத்தி பங்காளிகளாலும் வலியுறுத்தப்படுகிறது. காலநிலை மாற்றத்தின் தாக்கங்களுக்கு ஆளாகும் போக்கு அதிகரித்து வரும் நாடாக இலங்கை இருப்பதால், இத்தகைய பேரழிவுகளை மேம்படுத்துவதற்கும், அவற்றை நிர்வகிப்பதற்கும், பதிலளிப்பது அவசியமானது. அதன்படி, 2025 வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் போது, அத்தகைய இடர்களை சரியாகக் கண்டறிந்து, அவற்றைத் தணிக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது, இடர்களுக்குப் பதிலளிக்கும் தன்மையை மேம்படுத்துதல் மற்றும் மீள்தன்மையை அதிகரிப்பது ஆகியவற்றில் போதிய கவனம் செலுத்தப்பட வேண்டும். குறிப்பாக, அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்தும் போது பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கும் உத்திகள் சேர்க்கப்பட வேண்டும்.

### 03.5 நிலையான அபிவிருத்தி இலக்குகள்

நிலையான அபிவிருத்தி இலக்குகள் 17 மற்றும் நோக்கங்கள் 169 இன்படி செலவின மதிப்பீடுகளைக் குறியிடுவதற்குத் தேவையான வழிகாட்டுதல்கள் மற்றும் வழிமுறைகளைக் கொண்ட வகைப்பாடு வழிகாட்டுதல்களை நிலையான அபிவிருத்தி பேரவை வெளியிட்டுள்ளது. இந்த வழிகாட்டுதல்களை நிலையான அபிவிருத்திப் பேரவை இணையத்தளமான https://sdc.gov.lk/ இலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். அந்த வழிகாட்டுதல்களின்படி, அனைத்து வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டங்களும் நிலையான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் குறிக்கோள்களுடன் சீரமைக்கப்பட வேண்டும், இதற்காக ஏற்கனவே உங்கள் நிறுவனங்களில் நிலையான அபிவிருத்தி பேரவையுடன் தொழில்நுட்ப ஆதரவுடன் அதற்குரிய அதிகாரிகள் மூலம் அடையாளம் காணப்பட்டது. இவ்வாறு தொகுக்கப்பட்ட வரவுசெலவுத் தகவல்களின் மென் நகல், செலவின மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்படும் தருணத்தில், தேசிய வரவு செலவுத் திணைக்களத்திற்கு ஒரு பிரதியுடன் info@sdc.gov.lk என்ற நிலையான அபிவிருத்திப் பேரவையின் மின்னஞ்சல் முகவரிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

### 03.6 பாலின அக்கறை

நிலையான அபிவிருத்தி இலக்குகளின் இலக்கம் 05 ஆனது அனைத்து பெண்கள் மற்றும் சிறுமிகளின் பாலின சமத்துவம் மற்றும் அதிகாரமளிப்பதை நோக்கமாகக் கொண்டிருப்பதால், வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தை தயாரிப்பதில் பாலின அக்கறைக்கு விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

**03.7 நிதி ஒதுக்கீடுகளை வழங்குவதற்கான முன்னுரிமை வரிசை**

பின்வரும் முன்னுரிமை வரிசையில் நிதி ஏற்பாடுகள் வழங்கப்படும்;

(அ) அத்தியாவசிய பொது சேவைகள் மற்றும் பராமரிப்புச் செயற்பாடுகளை பேணுவதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள்.
(ஆ) பொறுப்புகள் / அர்ப்பணிப்புக்கள் தொடர்பான கணக்கீடு அல்லது தீர்ப்பனவுக்குத் தேவையான நிதி ஏற்பாடுகள்.
(இ) வெளிநாட்டு உதவியின் கீழ் செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள், கடன் மறுசீரமைப்புச் செயன்முறை நிறைவடைந்துடன் மீண்டும் தொடங்கப்பட வேண்டும்.
(இ) ஏறக்குறைய முடிவடையும் நிலையிலுள்ள வேலையை பூரணப்படுத்தல்.
(ஈ) தொடங்கப்பட்ட திட்டங்கள் / திட்டங்களின் அடுத்த கட்டத்திற்கான ஏற்பாடுகள்.

I. பகுதியளவு முடிக்கப்பட்ட கருத்திட்டங்களின் முக்கியமான பணிகளை மட்டும் நிறைவுசெய்து, குறித்த கருத்திட்டங்களை செயற்பட வைத்தல்.
II. இடைநிறுத்த முடிவு செய்யப்பட்ட கருத்திட்டங்கள் தொடர்பாக இதுவரை முடிக்கப்பட்ட பணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.
III. கருத்திட்டங்களின் அடுத்த படிகளை மேற்கொள்வது.

(உ) மேற்படி 03.1.i இல் குறிப்பிடப்பட்டவாறு தகைமைபெற்ற புதிய கருத்திட்டங்கள்

வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் மூலம் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படும் அனைத்து நிறுவனங்களும் இந்த வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

**03.8 செலவின மதிப்பீடுகளைச் சமர்ப்பித்தல்**

மேற்கூறியவற்றைக் கருத்திற் கொண்டு, முறையாகத் தயாரிக்கப்பட்ட அனைத்து பின்னிணைப்புகளையும் **2024 ஆகஸ்ட் 28** அன்று அல்லது அதற்கு முன் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

செலவின மதிப்பீடுகளுக்காக 2025 EXP_ES பதிப்பு மற்றும் முற்பணக் கணக்கு மதிப்பீடுகளுக்காக 2025 ADV_ES பதிப்பு ஆகியவற்றைப் பயன்படுத்தி, ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமை (ITMIS) மூலம் மதிப்பீடுகளைச் சமர்ப்பித்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும். 2025-2027 ஆம் ஆண்டிற்கான நடுத்தர கால வரவுசெலவுத்திட்டக் கட்டமைப்பிற்குள் 2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகள் மற்றும் 2026 மற்றும் 2027 ஆம் ஆண்டுகளுக்கான வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளை உள்ளிடுவது கட்டாயமாகும்.

இதற்கு மேலதிகமாக, அத்தகைய ஆவணங்களின் வன் மற்றும் மென் பிரதிகள் தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்தின் தொடர்புடைய பதவிநிலை அலுவலர்களிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ITMIS இல் தரவுகளை உள்ளிடும்போது ஏதேனும் உதவி தேவைப்படின், 011-2484999 என்ற இலக்கத்தினூடாக ITMIS உதவி மைய அலுவலர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**04. வருமான மதிப்பீடுகளைச் சமர்ப்பித்தல்**

வருமான மதிப்பீடுகளைச் சமர்ப்பிப்பதற்கான வழிகாட்டுதல்களைக் கொண்ட தனியான சுற்றறிக்கையினை அரசிறைக் கொள்கைத் திணைக்களம் உரிய காலத்தில் வெளியிடும்.

**05. தெளிவுபடுத்தல்கள்**

இதுதொடர்பாக மேலும் ஏதேனும் தெளிவுபடுத்தல் தேவைப்படின், உங்கள் அமைச்சு / திணைக்களம் / நிறுவனத்தின் விடயத்திற்குப் பொறுப்பான தேசிய வரவு செலவுத் திணைக்களத்தின் தொடர்புடைய பதவிநிலை அலுவலரைத் தொடர்பு கொள்ளவும்.

**ஒப்பம்/ கே.எம். மஹிந்த சிறிவர்தன**
திறைசேரியின் செயலாளர்

பிரதிகள்:

i. சனாதிபதியின் செயலாளர்
ii. பிரதமரின் செயலாளர்
iii. அமைச்சரவையின் செயலாளர்
iv. கணக்காய்வாளர் நாயகம்
v. செயலாளர், நிதி ஆணைக்குழு

**பின்னிணைப்பு 01**

உப கருத்திட்டங்கள் / மூலதனச் செலவினங்களின் கீழான விடயங்களாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளுடன் கூடிய செலவின மதிப்பீடுகளின் விவரங்கள்

**அமைச்சு / திணைக்களம்**

| தொடர் இல. | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | ஒதுக்கீடுகளான செலவின தலைப்பு விபரம் (அ) | அங்கீகாரம் (ஆ) | கருத்திட்டம் தொடங்கப்பட்ட வருடம் | கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கும் வருடம் | மொத்த மதிப்பிடப்பட்ட செலவினம் (இ) | 31.07.2024 வரை திரட்டிய செலவினம் | 2024 வருட காலப் பகுதியில் எதிர்பார்க்கப்பட்ட செலவு | 2025 வருடத்திற்குத் தேவையான எதிர்பார்க்கப்பட்ட ஒதுக்கீடு | 31.07.2024 அன்றுள்ளவாறு திரட்டு முன்னேற்றம் (பௌதிக) | மதிப்பீடு 2026 | மதிப்பீடு 2027 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | ரூபா மில்லியன் | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |

குறிப்புகள்

(அ). புதிய கருத்திட்டமாயின் “புதியது” எனக் குறிப்பிடுக

(ஆ). அமைச்சரவை அங்கீகாரத்துக்கு இல.1, தேசிய திட்டமிடல் திணைக்கள அங்கீகாரத்துக்கு இல. 2, வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கு இல. 3 எனக் குறிப்பிடுக.

(இ). கருத்திட்டத்திற்காக அமைச்சரவையினால் தற்போது அங்கீகரிக்கப்பட்ட மொத்த செலவு மதிப்பீடு குறிப்பிடப்படுதல் வேண்டும்.

## வரவுசெலவுத்திட்ட மதிப்பீடு -2025

**கருத்திட்ட பொழிப்பு (ஒவ்வொரு அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கும் பூர்த்திசெய்யப்பட வேண்டும்)**

1 **செலவினத் தலைப்பு மற்றும் இல.**
2 **உப கருத்திட்ட இல.**
3 **செலவின தலைப்பு விபரம்**
4 **அங்கீகார இயல்பு (குறிப்பு 1 இனைப் பார்க்க)**

5 **கருத்திட்ட நோக்கம்**

(3-5 வரிகளில் குறிப்பிடுக)

6 **செயற்பாட்டு அட்டை (பட்டியல்)**

(செயற்பாடுகளை 5-10 வரிகளில் விபரிக்குக)

1
2
3
4
5

7

| கருத்திட்ட சுட்டிகள் | 2023 | 2024 | 2025 | 2026 | 2027 |
|---|---|---|---|---|---|
| செயலாற்றுகை சுட்டிகள் | | | | | |
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |
| 4 | | | | | |
| 5 | | | | | |
| | | | | | |
| **கருத்திட்டச் செலவு (ரூபா மில்லியன்)** | **2023** | **2024** | **2025** | **2026** | **2027** |
| **மீண்டெழும் செலவினம்** | | | | | |
| ஆளுக்குறிய வேதனாதிகள் | | | | | |
| ஏனைய மீண்டெழும் செலவின இயல்பு | | | | | |
| **மூலதனச் செலவினம்** | | | | | |
| உள்நாட்டு நிதியளிப்பு (குறியீடுகள் 11 மற்றும் 17) | | | | | |
| வெளிநாட்டு நிதியளிப்பு (குறியீடுகள் 12, 13, 14, 15 மற்றும் 16) | | | | | |
| **மொத்தம்** | | | | | |

8 **கருத்திட்ட முகாமைத்துவ அலகின் பதவியணி விபரம்**

| தொடர் இல. | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

9 **கருத்திட்ட முகாமைத்துவ பிரிவின் கீழ் வாகனங்கள் பற்றிய விவரங்கள்**

| வாகன வகை | எண்ணிக்கை |
|---|---|
| கார் | |
| ஜீப் | |
| டபள்கெப் | |
| வேன் | |
| பேரூந்து | |
| முச்சக்கர வண்டி | |
| மோட்டார் சைக்கிள் | |
| ஏனைய | |

**குறிப்பு:-**

1 தற்போது காலக்கெடு நிர்ணயம் செய்யாமல் வருடாந்த ஒதுக்கீட்டின் கீழ் செய்யப்படும் செலவினங்களில், உரிய பணிகளை ஆய்வு செய்து, இலக்கு நிர்ணயம் செய்வதற்கான திகதியை நிர்ணயம் செய்ய வேண்டும்.

2 கருத்திட்டங்களின் மொத்த செலவின்படி, செயற்படுத்துவதற்கு அமைச்சரவை அல்லது தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் ஒப்புதல் பெறப்படுதல் வேண்டும். இல்லையேல் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அமுல்படுத்தப்பட வேண்டிய வரவுசெலவுத் திட்ட முன்மொழிவாக அடையாளப் படுத்தப்பட்டிருக்க வேண்டும். அதன்படி, தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் தொடர்புடைய அமைச்சரவை தீர்மானம் மற்றும் / அல்லது கடிதத்தின் திகதி மற்றும் இலக்கம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும். வரவு செலவுத் திட்டத்தில், தொடர்புடைய வருடம் மற்றும் முன்மொழிவு இல. என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.

பின்னிணைப்பு 03

**வட்டி மற்றும் உரிமைகோரல்கள் பற்றிய விவரங்கள் - கையில் உள்ள அனைத்து பில்களும், பில் செலுத்துதல் தாமதமாதல் காரணமாக வட்டி மற்றும் பின்வரும் அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள கோரிக்கைகள் செலுத்த முறையான அனுமதி பெற்றிருக்க வேண்டும்**

| | **வெளிநாட்டு நிதியுதவி கூறுகளுக்கு** | | | | | **உள்ளூர் கூறுகளுக்கு** | | | | | **ஏனைய கோரிக்கைகள்** | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கருத்திட்டத்தின் பெயர் | அசல் பில்லின் மதிப்பு, அது செலுத்த வேண்டிய நாணயத்தில் | சமர்ப்பித்த திகதி | வட்டி விகிதம் | 2024/06/30 அன்றுள்ளவாறு திரட்டிய வட்டி | 2025 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு தேவை பில் மற்றும் அது செலுத்த வேண்டிய நாணயத்தில் வட்டி. **(1)** | அசல் பில் - ரூபா மில்லியன் | சமர்ப்பித்த திகதி | வட்டி விகிதம் | 2024/06/30 அன்றுள்ளவாறு திரட்டிய வட்டி ரூபா மில். | 2025 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு தேவை பில் மற்றும் அது செலுத்த வேண்டிய நாணயத்தில் வட்டி. **(2)** | கோரிக்கை வகை* | உரிமைகோரலின் மதிப்பு, அது செலுத்த வேண்டிய நாணயத்தில். | | உரிமைகோரலுக்கான வட்டி, அது செலுத்த வேண்டிய நாணயத்தில். | | கோரிக்கையை செலுத்துவதற்கான ஒப்புதல் பெறப்பட்டது.** | 2025 ஆம் ஆண்டிற்கான கோரிக்கைகளை செலுத்துவதற்கு தேவையான ஒதுக்கீடு - ரூபா மில். **(3)** | 202க்கான மொத்த ஒதுக்கீட்டு தேவை5*** **- ரூபா மில்.** |
| | | | | | | | | | | | | நாணய வகை | பெறுமதி | நாணய வகை | பெறுமதி | | | |
| | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | |

* உரிமைகோரலின் வகை - செயலற்ற கட்டணம், நியாயமான லாபம், மேல்நிலை அல்லது வேறு ஏதேனும் இருந்தால் குறிப்பிடவும்.

** கோரிக்கைகளை செலுத்துவதற்கான ஒப்புதல் பெறப்பட்டது - NOR, அமைச்சரவை ஒப்புதல் அல்லது வேறு ஏதேனும் ஒப்புதல் (தயவுசெய்து குறிப்பிடவும்)

***2025 ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு தேவை - மொத்தம் (1), (2), (3) ரூ மில்லியன்

**பகுதி (அ)**

**2025 இற்கான சம்பளங்கள், ஊதியங்கள் மற்றும் பிற கொடுப்பனவுகள் (ஒவ்வொரு வ.செ.திட்ட கருத்திட்டத்திற்கும் தனியான படிவங்களை சமர்ப்பித்தல்)**

| இல. | பதவி | பெயர் | சம்பள குறியீடு | நிரந்தர / அமைய | 1001 | 1003 | | | | | | 1202 | 1401 | 1402 | வருடாந்த வாழ்க்கைச்செலவுக்கொடுப்பனவு ரூபா.15,000/- |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2024 வருடத்திற்கு சம்பள அதிகரிப்புடன் அடிப்படை சம்பளம் | மாதாந்த வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு (ரூ.17,800/-) | மாதாந்த உதவித்தொகை ரூ. 5000/- (பொ.நி 3/22) | மாதாந்த நிறைவேற்றுத்தர கொடுப்பனவு | மாதாந்த மொழிக் கொடுப்பனவு | மாதாந்த விஷேட இடைக்காலக் கொடுப்பனவு | மாதாந்தர மற்ற கொடுப்பனவுகள் (ஒவ்வொரு கொடுப்பனவையும் தனித்தனியாக குறிப்பிடவும்) * | மாதாந்தஎரிபொருள் கொடுப்பனவு | மாதாந்த போக்குவரத்துக்கொடுப்பனவு | மாதாந்த தொலைபேசி கொடுப்பனவு | |
| | | | | | (ரூபா) | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| | மொத்தம் | | | | | | | | | | | | | | |

* தேவையானவாறு நிரல்களை உட்புகுத்தவும்

**பகுதி (ஆ)**

**பதவியணி விபரங்கள்**

| அமைச்சு / திணைக்களம்/ நிறுவனம் | அங்கீகரிக்கப்பட்ட / உண்மையான பதவியணி (2024.06.30 அன்றுள்ளவாறு) | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சிரேட்ட மட்டம் | | | | மூன்றாம் நிலை | | இரண்டாம் நிலை | | ஆரம்ப நிலை | | ஏனைய | | மொத்தம் | |
| | வகுப்பு I மற்றும் விஷேட காம் | | வகுப்பு II மற்றும் III | | | | | | | | | | | |
| | அங்கீகரிக்கப்பட்ட | உண்மையான | அங்கீகரிக்கப்பட்ட | உண்மையான | அங்கீகரிக்கப்பட்ட | உண்மையான | அங்கீகரிக்கப்பட்ட | உண்மையான | அங்கீகரிக்கப்பட்ட | உண்மையான | அங்கீகரிக்கப்பட்ட | உண்மையான | அங்கீகரிக்கப்பட்ட | உண்மையான |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |

**பிண்ணினைப்பு 05**

**2025 வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டுக்கான முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்**
**அரசாங்க அலுவலர்கள் முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்**

**அமைச்சு / திணைக்களம்/ மாவட்டச் செயலகத்தின் பெயர்:**

**முற்பண பீ கணக்கின் விடய இல.**

| | | | | |
|---|---|---|---|---|
| 2024.06.30 அன்றுள்ளவாறு நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை | | xxx | | |
| 30.06.2024 அன்றுள்ளவாறு ஒப்பந்த மற்றும் அமைய ஊழியர்களின் எண்ணிக்கை | | xxx | | |
| ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை | A | xxx | | |
| | | | | |
| **பண்டிகை மற்றும் விஷேட முற்பணம்** | | | | |
| ஊழியர் ஒருவருக்கு பண்டிகை மற்றும் விஷேட முற்பணம் (10,000+4,000) | | | 14,000 | |
| பண்டிகை மற்றும் விஷேட முற்பணத்துக்கு தேவையான மொத்த ஒதுக்கீடு **(A x 14,000)** | B | | **xxxxx** | |
| | | | | |
| **இடர் கடன்கள்** | | | | |
| சிரேட்ட / மூன்றாம் நிலை/ இரண்டாம் நிலை ஊழியர்களின் எண்ணிக்கை | C | | xxxx | |
| சிரேட்ட /3ம் நிலை/ 2ம் நிலை ஊழியருக்கான இடர் கடன் | | | 250,000 | |
| | | | | |
| சிரேட்ட /3ம் நிலை/ 2ம் நிலை ஊழியருக்கான இடர் கடனுக்கான மொத்த ஒதுக்கீடு **( C x 250,000)** | D | | **xxxxx** | |
| | | | | |
| ஆரம்ப நிலை ஊழியர்களுக்கான மாதாந்த மொத்த அடிப்படை சம்பளம் | E | | xxxx | |
| ஆரம்ப நிலை ஊழியர்களுக்கான மொத்த ஒதுக்கீடு **( E x 10)** | F | | **xxxxx** | |
| | | | | |
| தேவையான மொத்த ஒதுக்கீடு **( B+D+F)** | | | | xxxxxxx |
| 30.06.2024 இறுதியில் முற்பண "பி" கணக்கு தற்போதய மீதி | | | | (xxxxxx) |
| 30.06.2024 அன்று முற்பண "பி" கணக்கில் எஞ்சிய ஏற்பாடுகள் | | | | (xxxxxx) |
| கடன்கள் மற்றும் முற்பணங்களைச் செலுத்துவதற்கு தேவையான மீதி தொகை | G | | | xxxxxxx |
| | | | | |
| | | | | **பரிந்துரைக்கப் பட்ட தொகை** |
| **2024 இற்கு தேவையான ஆகக்கூடிய செலவின வரையறை** | G | | **xxxxxx** | **xxxx** |
| | | | | |
| 01.01.2024 – 30.06.2023 காலப்பகுதிக்கான மொத்தப் பெறுகை | | | xxxx | |
| மாதத்துக்கான சராசரிப் பெறுகை | | | xx | |
| வருடத்திற்கான எதிர்பார்க்கப்பட்ட பெறுகை 2023 | | | xxxx | |
| | | | | |
| **2025 இற்கு தேவையான ஆகக் குறைந்த பெறுகை வரையறை** | | | | **xxxx** |
| | | | | |
| 01.01.2024 அன்றுள்ளவாறு முற்பண "பி" கணக்கு மீதி | | | xxxxx | |
| 2024 வருடத்திற்கு எதிர்பார்க்கப்பட்ட மொத்த செலவினம் | | | xxxx | |
| 2024 வருடத்திற்கு எதிர்பார்க்கப்பட்ட மொத்த பெறுகைகள் | | | (xxxxxxx) | |
| 31.12.2024 அன்றுள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட மீதி | | | xxxxxxx | |
| | | | | |
| 2025 இற்கு தேவையான மொத்த செலவினம் | | | xxxxxxx | |
| 2025 இற்கு தேவையான மொத்த பெறுகைகள் | | | (xxxxxxx) | |
| **2025 பற்று மீதிக்கு தேவையான ஆகக்கூடிய வரையறை** | | | **xxxxxxx** | **xxxxxx** |

திகதி: ..........................

............................................
ஒப்பம்
திணைக்களத் தலைவர்